7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2)சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் ஒத்தி வைக்கப்படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட்டிற்கு இப்பேரவையிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு நான்கு வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுக்களைக் கொடுத்து இருக்கிற காரணத்தால், இன்று தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. ஆனால் இன்று மானியக் கோரிக்கைகள் எல்லாம் விவாதம் முடிவுற்று 1.30 மணிக்குள் இங்கே மானியக் கோரிக்கைகள் அனைத்தும் வாக்கெடுப்புக்கு விடவேண்டிய அளவிற்கு 'கில்லெட்டின்' நாளாக இருந்த காரணத்தாலும், வேறு பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டு, அவை உறுப்பினர்கள் அனைவரும் இங்கே கவனம் செலுத்திக் கொண்டிருந்த

காரணத்தாலும், இன்று அந்தத் தேர்தலை நடத்த முடியவில்லை. அதற்கான தேர்தல், நாளை மறுநாள், 29-4-1993 அன்று பேரவையின் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஏற்கனவே இருந்த டைம்—தான். திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 பேர்கள் மனு கொடுக்க வேண்டிய இடத்திலே 4 பேர்கள் கொடுத்துள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்தந்தக் கட்சியிலே எவ்வளவு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் சொல்ல முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதுபற்றிய குறிப்பை வழக்கமாக, வேட்பாளர்கள் பற்றிய குறிப்பை, உங்களுக்குச் செய்தித்தாள் மூலம்தான் அனுப்புவது வழக்கம். இந்தத் தேர்தல் நாள் இன்று என்று அறிவித்து இருந்த காரணத்தால், இன்று நடத்த முடியாத சூழ்நிலையில் இந்தத் தேர்தலை ஒத்திவைத்த அறிவிப்பைதான் இங்கே உங்களுக்கு நான் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு நடைபெறவிருந்த அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு, நாளை மறுநாள், 29ஆம் தேதி காலை 10.30 மணிக்கும், பிற்பகல் 1.30 மணிக்கும் இடையில் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.38 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

196. திருவாளர்கள் இந்திய குடும்ப கட்டுப்பாட்டுச் சங்கத்தின் சென்னை கிளை, உபயோகத்திற்காக, எம். எச். 01பி 6901 என்ற பதிவு எண் கொண்ட ஜீப் வாங்குவதற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5-1-1993 ஆம் நாளிட்ட 2ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட